மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 02 | குரல்: 132 | வள்ளுவர் ஆண்டு 2054 | சனிக்கிழமை 13.01.2024 | பக்கங்கள் 08

## போர் இல்லாத நாட்டில் பாதுகாப்புக்காக எதற்கு அதிக பணம்!



பக்கம்–05

### எம் கே.சிவாஜிலிங்கம் கேள்வி!

## சனநாயகப் படுகொலைகளை தொடர்ந்தும் நிகழ்த்தும் சிறீலங்கா அரசு!

பக்கம்–06

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

## தமிழரசுக்கட்சி இப்போது யாரின் கட்டுப்பாட்டில்!



பக்கம்–04

## விஜயதாஸ போன்ற இனவாதிகளே இன ஒற்றுமைக்கு தடையானவர்கள்!



பக்கம்–05

### வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!

# ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

## அயலகத் தமிழர் மாநாடும் தமிழர் பிரச்சினையும்.

தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையை ஒரு பொருட்டாகவே கருதாத இலங்கை அரசாங்கத்திடம் இனப்பிரச்சினைக்கான தீர்வை எதிர்பார்ப்பது ஒரு வேண்டாத வேலை என்கிற புரிதல் ஏன் இன்னமும் தமிழர் தரப்பிடம் ஏற்படவில்லை என்பது பெரும் விநாவே. இந்தப் புரிதல் இல்லாமைக்கு காரணம் என்னவென்று ஆராய்வதற்கு முயற்சி செய்யப்படவில்லையா அல்லது புரிந்தும் புரியாதது போன்றதொரு நிலைமையா என்பது அடுத்த கேள்வியாகும்.

இவ்வாறான நிலையில், தமிழகத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் உரையாற்றியுள்ள ரெலோ அமைப்பின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் இலங்கை அரசின் கொடுங்கோல் ஆட்சியை முறியடிக்கின்ற அகிம்சை போராட்டத்திற்கு தமிழ்நாடு அரசு உதவ வேண்டும் என கோரிக்கை விடுத்திருக்கும் அதே நேரம், ஈழத்தமிழர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்க தமிழக அரசு என்றும் துணை நிற்கும் என்று நம்புவதாகவும் கூறியிருக்கிறார்.

இது அவருடைய நம்பிக்கையைக் காட்டுகிறது. இருந்தாலும் வெறுமனே தமிழ் நாட்டின் உதவியினால் மாத்திரம் தமிழர்களின் பிரச்சிரனைக்குத் தீர்வு சாத்தியப்படக்கூடியதா என்று நாம் சிந்திக்க வேண்டும்.

இலங்கையில் அகிம்சை வழிப் போராட்டங்கள் தொடர்பிலான அக்கறையின்மை காரணமாகவும், தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் பாகுபாடுகள், தரப்படுத்தல்கள் என வரிசைப்படுத்தப்பட்ட சிக்கல்கள் காரணமாக போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கின. அரசியல் ரீதியான முயற்சிகள் தோற்றுப் போனதனால் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தது.

இலங்கை அரசின் கொடுங்கோல் அடக்குமுறைகள், வன்முறைகள் காரணமாக நாளுக்கு நாள் நாட்டைவிட்டுச் செல்கின்ற தமிழர்களின் எண்ணிக்கைகள் அதிகரித்தன. அது மேற்குலக நாடுகளுக்கும், அருகிலுள்ள தமிழ் நாட்டுக்கும் என அகதிகளாக புலம்பெயரத் தூண்டின.

போர் ஓய்வுக்குப் பின்னரும் கூட தமிழ் நாட்டுக்கு அகதிகளாக ஆபத்தான கடல்வழிப் பயணங்களை மேற்கொண்டு தஞ்சம் கோரும் படலம் முடிவுக்கு வரவில்லை. தமிழ்நாட்டை சென்றடைகின்ற இலங்கை தமிழ் மக்களுக்கு தமிழ்நாடு அரசு பெரும் உதவிகளை வழங்கிவருகிறது.

ஆனால், இந்திய அரசின் முழுமையான ஒப்புதல் இன்றி இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளில் தமிழ்நாட்டினால் எவ்வாறான உதவிகளை, ஒத்துழைப்புகளை நல்க முடியும் என்பதுதான் இந்த இடத்தில் சிக்கல்.

ஈழ மக்களின் பிரச்சினைகள் ஆயுத யுத்தமாக மாறிய பின்னர் பூட்டானின் தலைநகர் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தை, அதில் எட்டப்பட்ட முடிவுகள் தீர்வைத் தரவில்லை. அதன் பின்னர் தொடர்ந்த யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் குறைபாடுகள், விடுபாடுகள் காரணமாக தமிழர் தரப்பு முழுமையாக அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தாலும் விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அதனை ஏற்றுக் கொண்ட தரப்பினரின் பங்குபற்றலுடன் வட கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்டது.

வட கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டாலும் அதனை முழுமையான அரசாக நடைமுறைப்படுத்துவதில் உண்டான நிலைப்பாடு, செயற்பாட்டு ரீதியான பிரச்சினைகள் காரணமாக முதலமைச்சராக இருந்த வரதராஜபெருமாள் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்திவிட்டு இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார். அவரது பிரகடனப்படுத்தல் இனப்பிரச்சினைக்கான போராட்டங்களின் போதான முன்னைய பிரகடனங்கள் போன்று பயனற்றே போனது.

அதன் பின்னரும் கூட தமிழர்கள் தங்களது விட்டுக் கொடுப்புக்களையும், கோரிக்கைகளையும் முன் வைத்து வந்திருந்தாலும் அவைகளும் பயனற்றவைகளாகவே இருந்திருக்கின்றன. இவைகள் போலவே தமிழகத்தில் இம்முறை நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் விடுக்கப்படும் கோரிக்கைகளும் பயனற்றே போகும்.

ஏனென்றால், தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையை பொருட்டாகக் கருதும் அரசாங்கம் இலங்கையில் உருவாகிவிடவில்லை. அப்படியானால், வேண்டாத வேலை என்கிற புரிதல் தமிழர் தரப்பிடம் ஏற்பட்டாகவேண்டும்.

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
+94 76 567 3339



# கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்ட பதற்றம்:கடும் மோதலில் பலர் காயம்!





கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கடும் மோதல் காரணமாக 19 கைதிகள் காயமடைந்துள்ளனர். மேலும் சுமார் 60 கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

வெலிகந்த கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தின் கைதிகளில் இரண்டு குழுக்களுக்கு இடையில் உணவுப் பிரச்சினை தொடர்பாக மதியம் 12:00 மணியளவில் மோதல் ஏற்பட்டுள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த மோதலின் போது கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து சுமார் 60 கைதிகள் தப்பிச் சென்றதாகவும் அவர்களில் 25 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வெலிகந்த பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் சமந்த ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

**குழு மோதல்**

தப்பியோடிய ஏனைய கைதிகளை கைது செய்வதற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து விசேட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக பொலன்னறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

தப்பியோடிய ஏனைய கைதிகளை கைது செய்யும் நடவடிக்கைக்கு சோமாவதிய பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு இடையூறாக இருப்பதாக சில்வா குறிப்பிட்டுள்ளார்.

**கைதிகள் காயம்**

இன்றைய தினம் பிற்பகல் உணவு வரிசையில் காத்திருந்த இருவருக்கு இடையில் மோதல் ஏற்பட்டு கற்கள் மற்றும் தடிகளால் தாக்கியதாக கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தின் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.இந்த மோதல் காரணமாக வெலிகந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில கைதிகள் பலத்த காயமடைந்து பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வெலிகந்த வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# இடமாற்றம் செய்யப்பட்ட யாழ். திருநெல்வேலி சந்தை: பாதிப்புக்குள்ளாகும் வியாபாரிகள்!





இடமாற்றம் செய்யப்பட்ட யாழ். திருநெல்வேலி சந்தை: பாதிப்புக்குள்ளாகும் வியாபாரிகள்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தையில் சிறு பொருட்களை விற்பனை செய்யும் வியாபரிகள் தமக்கு நல்லதொரு இடத்தினை ஒதுக்கி தருமாறு கேரிக்கை விடுத்துள்ளனர்.

திருநெல்வேலி சந்தையில் நீண்டகாலமாக சிறு பொருட்களை வியாபாரம் செய்து வரும் வியாபாரிகளுக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், பிரதேச சபையினால் சந்தைக்குள் வேறு இடம் ஒன்று வியாபர நடவடிக்கைக்காக ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் பிரதான வாயிலுக்கு அருகில் அவர்கள் வியாபாரம் செய்து வந்த வேளை, சந்தைக்கு வந்து செல்வோர் அவர்களிடம் பொருட்களை வாங்கி செல்ல இலகுவாக இருந்தது.

**மின்சார வசதி சிக்கல்**

தற்போது ,அவர்கள் முன்னர் வியாபாரம் செய்த இடங்கள் வாகன தரிப்பிட பகுதியாகவும், சந்தையில் இருந்து பொருட்களை ஏற்றி இறக்கும் வாகன தரிப்பிடமாகவும் மாற்றப்பட்டுள்ளது.

அந்த பகுதியில் வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு சந்தைக்குள் பிறிதொரு இடத்தினை பிரதேச சபை ஒதுக்கி கொடுத்துள்ளது.

புதிதாக ஒதுக்கி கொடுக்கப்பட்ட இடமானது , சந்தையின் ஒதுக்கு புறமான பகுதி, அங்கு தமக்கு வியாபாரம் நடைபெறவில்லை.

இட வாடகையாக முன்னர் 80 ரூபாய் வாங்கியவர்கள் தற்போது 150 ரூபாய் வாங்குகின்றார்கள்.

மின்சார வசதிகள் கூட செய்து தரவில்லை. எமது வியாபர நடவடிக்கைக்காக சந்தைக்குள் நல்லதொரு இடத்தினை ஒதுக்கி தர பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர்.

# தமிழரசுக்கட்சி இப்போது யாரின் கட்டுப்பாட்டில்







இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவரை தேர்வு செயவதற்கான தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

என்றுமில்லாதவாறு இம்முறை மும்முனைப் போட்டி நடைபெறவுள்ளது.

அதாவது வடக்கில் இருந்து ஒருவர் கிழக்கில் இருந்து ஒருவர் வடக்கை தனது பூர்விகமாக கொண்டு தற்போது கொழும்பை வசிப்பிடமாக கொண்டவர் என அந்தப்போட்டி அமைந்துள்ளது.

**தமிழரசுக்கட்சி இப்போது யாரின் கட்டுப்பாட்டில்**

தமிழரசுக்கட்சி இப்போது யாரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்ற சந்தேகம் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்பது என்னமோ உண்மைதான். தற்போதைய தலைவர் பெயரளவிலேயே இருக்கும் நிலையில் ஆளாளாளுக்கு தம் இஷ்டப்படி நடந்து கொள்வதாக பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் யாருக்கு பின்னால் சென்றால் தமக்கு 'சீற்' கிடைக்கும் என்ற நிலையில் பலமானவர்களை ஆதரிக்கும் நிலையிலேயே தொண்டர்கள் உள்ளனர். இதில் தமிழ் மக்களை பற்றி எவரும் கவலைப்படுவதாக தெரியவில்லை.

சரி அதுபோகட்டும் கட்சியின் கட்டுக்கோப்பை பேண, பாதுகாக்க போட்டியிடும் மூவரும் கலந்து பேசி ஒரு முடிவிற்கு வாருங்கள் என பெருந்தலைவர் என்று அழைக்கப்படும் சம்பந்தன் சொல்லியும் மூவரும் பேசியும் எந்த முடிவிற்கும் வரவில்லை.

**இணக்கத்திற்கு வராதவர்கள்**

விளைவு வழமைக்கு மாறாக கட்சியின் தலைவரை தெரிவு செய்ய இரகசிய வாக்கெடுப்பு. அப்படியென்றால் இந்த தலைவர் தெரிவிற்கே ஒரு முடிவிற்கு , இணக்கத்திற்கு வராதவர்கள் நீண்டு புரையோடிப்போன தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையையா தீர்த்து வைக்கப்போகின்றார்கள் என மக்கள் நக்கலாக கேட்பதுவும் ஒரு வகையில் சரிபோலத்தான் படுகிறது.

# பொருளாதார நெருக்கடி தொடர்பில் மனித உரிமை கண்காணிப்பகம் அறிவிப்பு!




பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் மக்களின் உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக சர்வ தேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித் துள்ளது.

2024 ஆம் ஆண்டின் அறிக்கையில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இதனை தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில், அரசாங்கத்தின் ஒடுக்குமுறை கொள்கைகளும் பலவீனமான சமூக பாதுகாப்பும் பலருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையை உரு வாக்கியுள்ளதாக சர்வதேச மனித உரிமை கண் காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தொடர்ந்தும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றை ஒடுக் கிவருகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிரான பாரபட்ச கொள்கைகளை அரசாங்கம் தொடர்ந்தும் பின்பற்றுகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மில்லியன் கணக்கானவர்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்புவதற்காக போராடு கின்றனர் என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், இதற்கு ஊழலும் பொறுப்புக்கூறாத ஆட்சியுமே காரணம் என்றும் தெரிவித்துள்ளது.

வறிய நிலையில் உள்ளவர்கள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மூலம் தற்போதைய அரசாங்கம் பதில் நடவடிக்கைகளை எடுக்கின்றது எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

17 வீதமானமக்கள் ஓரளவு அல்லது கடும் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கும் நிலை இலங்கையில் காணப்படுகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடக்கு- கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் குடும்பத்தவர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அரசாங்கத்தின் கண்காணிப்பினை மிரட்டல்களை தொடர்ந்தும் எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவித்துள்ள மனித உரிமை கண்காணிப்பகம், ஆலயங்கள் உட்பட தமிழ் முஸ்லீம் மக்களின் சொத்துக்களை இலக்கு வைக்கும் காணி அபகரிப்பு கொள்கையை அரசாங்க அமைப்புகள் முன்னெடுக்கின்றன எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

# போர் இல்லாத நாட்டில் பாதுகாப்புக்காக எதற்கு அதிக பணம்: சிவாஜிலிங்கம் கேள்வி!



போர் இல்லாத நாட்டில் பாதுகாப்புக்காக எதற்கு அதிகமான பணம் ஒதுக்கப்படுகிறது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு எட்டப்பட்டால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் படி 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனவும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் நிறைவடைந்து தற்போது 15 வருடங்கள் பூர்த்தியாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின் போது இந்த விடயம் தொடர்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள இனப்பிரச்சனைக்கான முழுமையான தீர்வு எட்டப்பட்டால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும் என தெரிவித்துள்ளார் அரசியலமைப்பின்படி 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் விடுதலை புலிகளுடன் போர் நிறைவடைந்து தற்போது 15 வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக சுகாதாரத் துறையில் உள்ள பிரச்சினைகள் நாலாந்தம் தீவிரமடைந்துள்ள நிலையில் அதிகமான வைத்தியர்கள் மற்றும் சாதியர்கள் இலங்கையை விட்டு வெளியேறுவதாக அவர் சுட்டிக்காட்டி உள்ளார் சர்வதேச நாணயத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றும் நோக்கில் அரசாங்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் ஒரு மக்கள் போராட்டத்திற்கு வழிவகுக்குமான அவருக்கு உரியுள்ளார்

# விஜயதாஸ போன்ற இனவாதிகளே இன ஒற்றுமைக்கு தடையானவர்கள்!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அண்மையில் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பெரும்பாண்மை ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நோக்கி தமிழர்களின் சாபக்கேடு என இனவாதத்தை வாரி இறைத்துள்ளார் இதன் மூலம் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நீதித் துறைக்கு பொருத்தமான அமைச்சரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

விஜயதாஸ போன்ற பச்சை இனவாதம் பேசும் பௌத்த சிங்கள கடும் போக்கு இனவாதிகளினால் இந்த நாடு பிச்சா பாத்திரம் ஏந்தி நிற்கின்றது என்ற வரலாற்றை இலகுவில் இந்த நாட்டை நேசிப்பவரகள் மறந்து விட முடியாது. விஜயதாஸ போன்றவர்களே இலங்கைத் தீவின் சாபக்கேடு இனமுறுகலை கொதிநிலையில் வைத்து அரசியல் அதிகாரத்தைப் பெற நினைப்பவர்கள் இதனை தமிழர்கள் நன்கு அறிவார்கள்.

நல்லாட்சி என்ற பெயர்ப்பலகை ஆட்சியில் இதே விஜயதாஸ நீதி அமைச்சராக இருந்து என்ன செய்தார் என்பதை இந்த நாட்டு மக்கள் மறந்து விட மாட்டார்கள் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்ற நாடகத்தை ஆடி இனங்களிடையே முரண்பாட்டை அதிகரித்தவர் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற கொடிய சட்டத்தை கொண்டுவர பகீரத பிரையத்தனம் செய்தவர் நாட்டில் உள்ள மூவின மக்களையும் நீதியாக மதிக்கத் தெரியாத கடும் போக்குவாத பௌத்த இனவாதி. உண்மையில் அந்த காலப் பகுதியில் பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிருக்க முடியும் அதற்கு தடையாக இருந்த பெரும் பங்கு அமைச்சர் விஜயதாஸவுக்கு உண்டு

தற்போதைய ஆட்சியில் நீதி அமைச்சராக இனவாத சிந்தனையுடன் இருப்பதால் சிங்கள மக்கள் தவிர்ந்த ஏனைய இனங்களுக்கு நீதி கிடைக்க வாய்ப்பில்லை மக்களின் ஜனநாயகம் நீதி போன்றவற்றை புறம் தள்ளியே உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் , நிகழ்நிலைக் காப்புச் சட்டமும் திணிக்கப்படுகின்றன எனவே விஜயதாஸ போன்ற இனவாதிகளே இலங்கைத்தீவின் இன ஒற்றுமைக்கு தடையாக இருக்கும் சாபக்கேடுகள்.



# கைதுகள் மூலம் அப்பட்டமான சனநாயகப் படுகொலைகளை தொடர்ந்தும் நிகழ்த்தும் சிறீலங்கா அரசு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
JAFFNA UNIVERSITY STUDENTS' UNION

கைதுகள் மூலம் அப்பட்டமான சனநாயகப் படுகொலைகளை தொடர்ந்தும் நிகழ்த்தும் சிறிலங்கா அரசு! கடந்த வாரம் சிறிலங்கா அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான பயணத்தின் போது அறவழியில் போராடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா அவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையினை மாணவ சமுதாயமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டிப்பதோடு, அப்பட்டமான சனநாயக உரிமை மீறலாகவும் இதனைப் பதிவு செய்கின்றது.

கடந்த வாரம் சிறிலங்கா அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான பயணத்தின் போது அறவழியில் போராடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா அவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையினை மாணவ சமுதாயமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கண்டிப்பதோடு, அப்பட்டமான சனநாயக உரிமை மீறலாகவும் இதனைப் பதிவு செய்கின்றது.

அனைத்துலகச் சமூகத்தின் முன்னால் சனநாயக உரிமைகள் வழங்கப்படுவதாக ஒரு போர்வை யைப் போர்த்திக் கொண்டு, அறவழியில் போராடிய மக்களின் உரிமையினை கிஞ்சித்தும் பொருட்படுத் தாது கைதுகள், விசாரணைகள் மூலமாக அடக்கியொடுக்குவதற்கு முயலும் இந்த சிறிலங்கா அரசின் போக்குகள் உலக அரங்கின் முன்னால் வெட்ட வெளிச்சமாக்கப்பட வேண்டியவையாகும்.

சிறிலங்கா அரச படைகளினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நியாயமானதும் நீதியானதுமான பதிலொன்றைக் கூறுவதற்கு இயலாத அரசு, அவற்றுக்கான பதில் கோரிப் போராடும் உறவுகளை இன்று வரையில் வீதியில் விட்டுள்ளதோடு, அவர்களுக்கான பரிகாரநீ தியையும் மறுத்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் தங்கள் உறவுகளுக்கு நேர்ந்த கதிக்கு பதில் கோரி அறவழியில்ப் போராடும் உறவுகளின் போராடும் உரிமையினையும் கருத்துரிமை யினையும் அடக்கியொடுக்கும் செயற் பாடாகவே வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா அவர்களின் கைது நோக்கப்பட வேண்டியுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக குரல் கொடுத்துவரும் இன்னபிற செயற்பாட்டாளர் கள், உறவினர்களை புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட அரச படைகள் அச்சறுத்தும் போக்கும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றது என்பது யாவரும் அறிந்ததே! இதுபோன்ற அப்பட்டமான சனநாயக மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் சிறிலங்கா அரசு உதட்டளவில் நல்லிணக்கம் பேசும் செயல்களில் ஈடுபடாமல், உளச்சுத்தியுடன் நிலையான நல்லிணக்கத்தினை எட்டுவதற்கு முயல வேண்டும். தமிழ் மக்களை ஓரவஞ்சனையுடன் வஞ்சித்து விட்டு நல்லிணக்கம் பற்றிய உரையாடல் களை மேற்கொள்வதென்பது 21ஆம் நூற்றாண்டில் நவீன வடிவில் அடிமைத்தனத்தை தமிழ் மக்கள் மீது திணிக்க முயல்வதாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

# இலங்கைக்கு பாராட்டு தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம்



சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் முதல் மதிப்பாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித் துள்ளது.

அதிபர் ரணில் விக்ரமசிங்க, மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு இடையில் கடந்த தினம் அதிபர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது.

இவ்விடயம் தொடர்பில் அதிபர் ஊடக பிரிவு மேலும் அறியத்தருகையில்,

“சாதகமான ஆரம்பத்துடன் மக்கள் மீது குறிப்பிடத் தக்க தாக்கத்தை ஏற்படுத்திய சவாலான மறுசீர மைப்புகளுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பை சர்வதேச நாணய நிதியம் வரவேற்றுள்ளது.

அத்துடன், ஆசியாவின் முன்னோடியாக மாறி, ஆட்சியை கண்டறியும் அறிக்கையை வெளி யிட்டமைக்காக சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில், அதன் பணிப் பாளர்கள் இலங்கைக்கு தமது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp
+94 76 567 3339

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அடிப்படை உரிமைகளுக்கு முரணானது!

## தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணி!



நாடாளுமன்றில் அரசாங்கம் சமர்ப்பித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் ஒவ்வோர் எழுத்தும் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் உறுப்புரைகளுக்கு முரணானது என தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் அமைப்பின் உறுப்பினர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

மேலும், நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தில் பல திருத்தங்களை உள்ளடக்கியதாக நீதி அமைச்சர் எடுத்தியம்ப முற்பட்டார்.

எனினும் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பித்த சட்ட மூலத்துடன் தொடர்புடைய 2023 செப்டெம்பர் 15 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் பாகம் இரண்டுக்கான குறைநிரப்பி என்றே இருக்கின்றது.

எனவே அமைச்சர் சபாபீடத்தில் பழைய தட்டையே சமர்ப்பித்துள்ளதாக வட்டகல ஊடகவியளாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இந்த வர்த்தமானி நாடாளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதே சட்டம் ஏப்ரல் மாதத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, மீண்டும் திருத்தப்பட்டு, செப்டெம்பர் மாதத்தில் கொண்டுவரப்பட்டது. அது தற்போது மூன்றாவது தடவையாகவும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஓர் எழுத்தையேனும் திருத்தாமல் செப்டெம்பர் மாதத்தில் சமர்ப்பித்த சட்டமூலத்தையே மீண்டும் கொண்டுவந்திருக்கிறார்கள். அதனால் மக்களை தவறாக வழிநடாத்த செயலாற்ற வேண்டாமென தாம் அரசாங்கத்தை எச்சரிப்பதாக சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

இந்த சட்டம் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்திற்கு முரணானது. அரசியலமைப்பின் மூன்றாவது மற்றும் நான்காவது உறுப்புரைகளில் உறுதிசெய்யப்பட்டுள்ள மக்களின் இறைமைத் தத்துவத்திற்கு முரணானது.

இந்தச் சட்டத்தின் உள்ளடக்கம் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்திற்கும் மக்களின் இறைமைத் தத்துவத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற இரண்டு உறுப்புரைகளின் ஒவ்வோர் எழுத்திற்கும் முரணானதாகும்.

அதைப்போலவே சமர்ப்பித்துள்ள பிரிவுகளுக்குள்ளே பயங்கரவாதம் என்பதற்கான பொருள்கோடல் வழங்கப்படவில்லை. எனினும் பயங்கரவாத தவறுகள் பற்றி பல உதாரணங்கள் தரப்பட்டுள்ளன. பயங்கரவாத தவறு என்பதற்கான பல விரிவான தெளிவுபடுத்தல்கள் தரப்பட்டுள்ளன. குறிப்பாக 19 ஆவது பிரிவின் பொருள்கோடல் மூலமாக பிடியாணையின்றி கைதுசெய்வதற்கான அதிகாரம் எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் எந்தவொரு முப்படை உத்தியோகத்தருக்கும் கரையோரப் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அதன் மூலமாக மின்சாரசபை ஊழியர்கள் அண்மையில் முன்னெடுத்த ஆர்ப்பாட்டங்கள் போன்ற, வேலைத்தளங்களில்கூட முன்னெடுக்கின்ற நியாயமான ஆர்ப்பாட்டங்களுக்கும் இடமளிக்காதிருக்கவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்திற்கு எதிராக குரல்கொடுப்பவர்களைக் கைதுசெய்து தடுத்துவைத்தலுடன் ஏற்புடைய ஏற்பாடுகள் இதில் இருக்கின்றன. நாட்டின் ஜனாதிபதிக்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும் அந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தடுத்துவைப்பதற்கான கட்டளையை விடுக்கின்ற வர்த்தமானி அறிவித்தல் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படவேண்டுமென எந்தவோர் இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

புனர்வாழ்வு அதிகாரசபை சட்டம், சமூக வலைத்தளங்களை அடக்குவதற்கான சட்டம், ஒளிபரப்பு அதிகாரசபை சட்டம் போன்ற சட்டங்களைக் கொண்டுவர முயற்சிக்கும் அரசாங்கம் அந்தச் சட்டங்களின் ஊடாக அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களைச் செய்கின்ற, நியாயமான மக்கள் எதிர்ப்புகள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடுவதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

ரணில், ராஜபக்ச குழு, இந்த தேர்தல் வருடத்தில் மேலும் ஒருநாளாவது அதிகாரத்தில் இருப்பதற்காகவே இந்த சட்டங்களை ஆக்கி வருகின்றது.

இந்தநிலையில் தேசிய மக்கள் சக்தி என்ற வகையில் இந்த பயணத்தைத் தொடர நாங்கள் இடமளிக்கமாட்டோம் என்று சுனில் வட்டகல குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சட்டங்களை அங்கீகரித்து, அது நோயாளர்களின் உயிர்களை ஆபத்தில் வீழ்த்திய கெஹெலிய ரம்புக்வெல்ல அப்பாவி எனக் கூறுவதற்காகவே முயற்சி எடுக்கப்படுகின்றது.

எனவே இந்த சட்டத்திற்கு எதிராக தாங்கள் உயர்நீதிமன்றத்திற்கு பல மனுக்களை சமர்ப்பிக்கவுள்ளதாகவும், இந்த படுமோசமான சட்டத்தை தோற்கடிப்பதற்காக நாட்டின் எல்லா இடங்களிலும் முனைந்து செயற்படப்போவதாகவும் தேசிய மக்கள் முன்னணி சட்டத்தரணிகள் அமைப்பின் சட்டத்தரணி சுனில் வட்டகல குறிப்பிட்டுள்ளார்.



# இளவரசியிடம் மலையகத் தமிழர் பற்றிய பிரித்தானியாவின் கடப்பாடுகளை நினைவூட்டுகின்றேன்: மனோ கணேசன்





இலங்கைக்கும் - பிரித்தானியாவுக்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவு தொடர்பில் இலங்கை வந்துள்ள பிரித்தானிய இளவரசிக்கு, இலங்கை வாழ் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் இருக்கின்ற, அவரது பிரித்தானிய முடியரசின் பாரிய கடப்பாட்டை நினைவுறுத்துகின்றேன் என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

தற்போது சென்னையில் அயலக தமிழர் மாநாட்டில் தமிழக அரசின் அழைப்பின் பேரில் கலந்துக் கொண்டுள்ள மனோ கணேசன் சென்னையிலிருந்து தனது அதிகாரபூர்வ எக்ஸ் தளத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

”இலங்கை - பிரித்தானிய வரலாற்றில் கறுப்புப் பக்கம், பெருந்தோட்ட மக்களின் அத்தியாயம்தான். இலங்கையின் ஏனைய மக்களுடன் ஒப்பிடும்போது கல்வி, சுகாதாரம், காணியுரிமை, வீட்டுரிமை, தொழில் உரிமை ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய தரவுகளைக் கொண்ட தமிழ் பெருந்தோட்ட வதிவாளர்களின், குறை வளர்ச்சி தொடர்பிலான பிரித்தானிய முடியரசின் வரலாற்று கடப்பாட்டை இளவரசி ஆன் ஏற்க வேண்டும்.

நலிவுற்ற பிரிவினரான நமது மக்கள் தொடர்பிலான குற்றச்சாட்டு பட்டியலை இளவரசி ஆன் மீது சுமத்த நான் விரும்பவில்லை. ஆனால், இந்த கறுப்பு பக்கம் தொடர்பான நினைவூட்டலை நான் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் என்று இன ரீதியாக அழைக்கப்படும் இம்மக்கள், பிரித்தானிய முடியரசின் பிரதிநிதிகளான கிழக்கிந்திய நிறுவனத்தினால் 1823ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்கள். இன்றும் கூட, எமது உழைக்கும் மக்கள் பெருந்தோட்ட முகாமை நிறுவனங்களுடன் பின்னிபிணைக்கப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவின் வெள்ளை ராஜ்யம் போன பிறகு உள்நாட்டு பிறவுன் ராஜ்யம் பெருந்தோட்டங்களில் எமது மக்களை இன்று ஆள்கிறது. இதனால் இதுவரையும் இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக கருதப்படாமல், நமது மக்கள் வாழ்கிறார்கள்.

இந்தியாவின் பாண்டிச்சேரி மக்களுக்கு பிரான்சிய ஆட்சியாளர்கள் செய்து விட்டு சென்ற ஏற்பாடுகளை ஒத்த ஏற்பாடுகளைக்கூட பிரித்தானியா எமது மக்களுக்கு செய்ய வில்லை.

ஆகவே, கடந்த காலங்களில் இழந்துவிட்ட வளர்ச்சியை மீளப்பெறும், விசேட ஒதுக்கீட்டு செயற்திட்டத்தின் அடிப்படையில், இலங்கையின் மிகவும் பின்தங்கிய பிரிவினரான பெருந்தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு உதவிட முன்வருமாறு பிரிதானியாவை நான், இம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப்பெரிய கட்சியின் தலைவர் என்ற முறையில் கோருகின்றேன்.

இன்று உங்களுக்கு பிரித்தானிய தூதுவர் அன்ரூ பெட்றிக் நடத்துகின்ற வரவேற்பு நிகழ்வுக்கு எனக்கு அழைப்பு விடுத்துள்ளார். நான் நாட்டில் இல்லாத காரணத்தால் அதில் கலந்துகொள்ள இயலாமல் இருப்பது அவருக்கு அறிவித்துள்ளேன்.

எமது கோரிக்கைகள் தொடர்பில் இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதுவரிடம் தொடர்ந்தும் உரையாட உள்ளேன்”என குறிப்பிட்டுள்ளார்.






தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 +94 77 149 9094
தேசியம் www.thesiyamnews.com THESIYAM